Written by Administrator
Saturday, 27 June 2009 10:25 -

□□□□□□□□ **27.06.2009**

அவிநாசி பேரூராட்சி முழுவதும் கொசு ஒழிப்பு புகை

அவிநாசி, ஜூன் 27-

அவிநாசி பேரூராட்சி முழுவதும் பொது சுகாதாரத்துறை சார்பும் பேரூராட்சி இணைந்து கொசு ஒழிப்பு மருந்து புகை அடிக்கும் பணி தீவிரமாக நடந்து வருகிறது.

அவிநாசி பேரூராட்சி பகுதியில் கொசுக்களினால் மரமும் டெங்கு, வைரல் காய்ச்சல் உள்ளிட்ட நோய்களை கட்டுப்படுத்த பொது சுகாதாரத்துறை முடிவு செய்தது.

இதையடுத்து அவிநாசி பேரூராட்சியுடன் இணைந்து நற்பேரு அலைஷ்டு யார்நெனிலும், சர்க்கரை பகுதிகளிலும் 'பைரத்ரம்' என்ற கொசு ஒழிப்பு மருந்து மாசலில் கலந்து புகை வடிவத்தில் அடிக்கப்பட்டு வருகிறது.

நேற்று முன்தினம் மாலை 4.00 மணிக்கு சீனிவாசபுரத்திலிருந்து புகை அடிப்பது துவக்கப்பட்டது.

பொது சுகாதாரத்துறை தீவிரம்

அவிநாசி வட்டார உணவு ஆய்வாளர் துரைராஜ், பேரூராட்சி செயல் அலுவலர் மாரியப்பன், சுகாதார ஆய்வாளர் கேசவராஜன், சேலூர் பி.எச்.சி., சுகாதார மேற்பார்வையாளர் முனிராஜன் ஆகியோர் கொசு ஒழிப்பு புகை அடிப்பு பணிகளை பார்வையிட்டனர். இப்பணியில் பேரூராட்சி சுகாதாரப் பணியாளர்கள் ஈடுபடுத்தப் பட்டுள்ளனர்.

அவிநாசி வட்டார சுகாதார உணவு ஆய்வாளர் துரைராஜ் கூறுகையில், 'திருப்பூர் சுகாதார மாவட்ட துணை இயக்குனர் உத்தரவின்படி, அவிநாசி பேரூராட்சி முழுவதும் கொசுக்களை ஒழிக்க அபேட் கரைசல் மற்றும் பைரத்ரம் மருந்து புகை பயன் படுத்தப்பட்டு வருகிறது. அபேட் கரைசல் கொசுவின் இளம்பருவமான லார்வா நிலையிலும் கொசு புழுக்களையும், பைரத்ரம் புகை முதிர்ந்த நிலையிலும் கொசுக்களையும் அழித்து விடும். ஒரு லிட்டர் பைரத்ரம் மருந்துடன் 19 லிட்டர் சாலைக் கலந்து புகையாக அடிக்கும் போது, ஒரு லிலோ மீட்டர் சுற்றளவிலுள்ள கொசுக்கள் அழிக்கப்படும். இந்த மருந்தின் தாக்கம் மூன்று மாதகாலம் இருக்கும்.இன்னும் ஒரு வாரத்துக்குள் அவிநாசி பேரூராட்சி முழுவதும் கொசு ஒழிப்பு புகை அடிக்கப்படும்' என்றார்.

அவிநாசி பேரூராட்சி பகுதியில் பொது சுகாதாரத்துறை சார்பில் கொசு ஒழிப்பு புகை தீவிரமாக அடிக்கப்பட்டு வருகிறது.